25—

பிறமாநிலங்களுக்கு உணவுப் பொருட்களைக் கொண்டு செல்ல தடைகளை அகற்றுதல்

* **36969—**திரு. ஆ. சுப்புரத்தினம் :

மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிறமாநிலங்களுக்கு உணவுப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கான தடைகளை அகற்றுமாறு மத்திய அரசு மாநில அரசைக் கேட்டுக் கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன முடிவு எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் முக்கிய உணவு அரிசியாக இருப்பதாலும், அண்டை மாநிலமான கேரள மாநிலம் அரிசி பற்றாக்குறை மாநிலமாக உள்ளதாலும் தமிழ்நாட்டிலிருந்து வெளி மாநிலங்ககளுக்கு நெல்/அரிசி கொண்டு செல்வதற்காக 100 சதவீதம் லெவியை தற்போது முழுமையாக நீக்க முடியாத நிலையில் உள்ளது என்று மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது. எனினும், குறுவைப் பருவத்தில் அதிகமாக விளையும் டி.கே.எம்.9 என்ற சிகப்பு மோட்டா ரக அரிசியை தமிழகத்தில் வாங்குவோர் இன்மையால் அதை மட்டும் 15-12-1994 வரை லெவியின்றி வெளி மாநிலங்களுக்குக் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டது.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கிற பதிலுரையில் மிகத் தெளிவாகக் கோடிட்டுக் காட்டி இருக்கிறார்கள். நம் மாநிலத்தில் உற்பத்தியாகக்கூடிய உணவுப் பொருட்கள் நம்முடைய தேவை போகத்தான் மற்ற மாநிலங்களுக்கு வழங்கப்படும் என்பதை மிகத் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். இந்நிலையில் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புவது, அதேபோல மற்ற மாநிலங்கள் வழங்குகின்ற நிலையில், குறிப்பாக மத்திய அரசு இதுபோன்ற தடைகளை அகற்ற வேண்டும் என்ற கோரிக்கை இருக்கக்கூடிய நிலையில், நம்முடைய் அரசானது, மத்திய அரசு நிர்வகித்து வரக்கூடிய சென்ட்ரல் பூலிலிருந்து நம்முடைய மாநிலத்திற்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும்

தங்குதடையின்றி வழங்கினால் இதுபோன்ற கட்டுப்பாடுகளுக்கு உடன்படுவோம் என்ற கோரிக்கையினை அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நெல்லைப் பற்றிய—அரிசியைப் பற்றிய கேள்வி. மற்ற பொருள்களைப் பற்றி இப்போது பதில் சொல்ல இயலாது. மத்திய அரசு இந்தியா முழுவதையும் ஒரே 'ஜோன்' என்று அறிவித்து, எந்த மாநிலத்திற்கு இடையிலேயும் கட்டுப்பாடுகள் விதிக்கக் கூடாது என்ற கொள்கையை எடுத்து இருக்கிறது. என்றாலும் அந்தந்த மாநிலங்கள் அவரவர்களுக்குரிய சூழ்நிலையையொட்டி, தேவையையொட்டி கொள்கைகளை நிர்ணயித்துக் கொள்கின்றன. ஆந்திர மாநிலத்தில், நெல் மிக அதிகமான அளவு உற்பத்தியாகிற அந்த மாநிலத்திலே கூட ஒரு குறிப்பிட்ட காலத்தில் நெல் அல்லது அரிசியை வெளி மாநிலங்களுக்கு அனுப்புவதில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்துகிறார்கள். அதையொட்டிதான் தமிழக அரசும் அப்படிப்பட்ட கட்டுப்பாட்டை மேற்கொண்டு வருகிறது. மத்திய தொகுப்பிலேயிருந்து நாம் கேட்டுக்கொண்டிருக்கிற அரிசியை ஓரளவுக்கு மத்திய அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. அரிசியைப் பொறுத்தவரையில் மத்திய அரசு வழங்குகிறது. வேறு பொருள்களை—எந்தெந்த பொருள்கள் தட்டுப்பாடு ஏற்படுகிறதோ அந்த நேரத்தில்தான் மத்திய அரசு சில முடிவுகளையெடுத்து அது தலையிட்டு கொள்முதல் செய்து மாநிலங்களுக்கு வழங்குகிறது.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் மாநிலத்தில் உற்பத்தியாகக்கூடிய ஒரு பொருளை பிற மாநிலங்களுக்கு வழங்குகிறபோது, நம் மாநிலத்தில் தட்டுப்பாடு ஆகக்கூடிய ஒரு உணவுப் பொருளை மத்திய அரசிடமிருந்து அதற்கு பதிலாகக் கேட்டு பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறதா ? அதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் முன்பே சொன்னேன். இப்போது அரிசியை பொறுத்தவரையில் நமக்கு தட்டுப்பாடு ஏற்படுகிற சூழ்நிலையில் தான் மத்திய அரசிடமிருந்து கேட்டு பெற்றுக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர பிரதேசத்திலிருந்து நம்முடைய மாநிலத்திற்கு

ஏராளமான அளவு அரிசி வருகிறது. இப்போது அந்த அரசானது 2 ரூபாய்க்கு அரிசி போடுவதாக சொல்லியிருப்பதால் அந்த அரிசி அங்கே ஸ்டாக் செய்யப்பட்டு இங்கே வரத்து குறைவாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் போதுமான அளவு அரிசி இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி போதுமான கையிருப்பு இருக்கிறதா ? மேலும் இப்போது மத்திய அரசானது 5000 கோடி ரூபாய்க்கு மானியம் கொடுப்பதற்கு பட்ஜெட்டில் ஒதுக்கி இருக்கிறார்கள். அதை நம்முடைய மாநிலத்திற்கு கொடுப்பதற்கு மத்திய அரசிடம் கேட்கப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியிலிருந்து தொடர்பற்ற கேள்விகளை வேறுவகையில் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் நெல், அரிசி தொடர்பான அந்த பதிலை மாத்திரம் நான் விளக்க விரும்புகிறேன். ஆந்திர மாநிலத்தில் அதிக அளவில் நெல் உற்பத்தியாகிறது. ஆகவே அவர்கள் அதை வைத்துக் கொண்டிருக்கவே முடியாது. அவர்கள் வெளி மாநிலங்களுக்கு அதை விற்றுத்தான் ஆகவேண்டும். அங்கே 2 ரூபாய்க்கு அரிசி போடுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிற அந்தத் திட்டத்திற்கும் அரிசியை வெளி மாநிலங்களுக்கு அனுப்புவதற்கும் தொடர்பே இல்லை. ஆகவே, அதனால் நமக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படப் போவதில்லை. தமிழகத்திற்கு அவர்கள் அரிசியை அனுப்பாமல் போனால் அங்கேயிருக்கிற விவசாயிகளுக்கு வருமானமே இல்லாமல் போய்விடும். ஆகவேதான் அவர்கள் அங்கே கொள்முதல் நடைபெறுகிறபோது கொஞ்சம் கட்டுப்பாடுகளை ஏற்படுத்துகிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், முன்னாலே மூலக்கேள்வி கேட்டவர்கள் சொன்னதைப்போல நம்முடைய மாநிலத்தில் அதிக அளவு உற்பத்தியாகிறது என்று இருந்தாலும் தேவையான அளவு உற்பத்தியாகிறதா என்பதை நிர்ணயிக்க முடியவில்லை. ஆகவே, பற்றாக்குறை ஏற்பட்டு விடக்கூடாது. அதன்மூலம் விலை ஏறிவிடக் கூடாது என்பதில்தான் அரசு கவனமாக இருக்கிறது. மத்திய அரசாங்கம் இப்போது உணவுக்காக நிதியொதுக்கீடு செய்ததைப் பற்றி குறிப்பிட்டார்கள். அவர்கள் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். மாநிலங்களுக்கு பணமாக உதவுவதற்கு அவர்கள் ஒதுக்கவில்லை. அவர்கள் அரிசியை கொள்முதல் செய்து மாநிலங்களுக்கு குறைந்த விலையில் வழங்குவதற்காக ஒதுக்குகிறார்கள். அதைப்போல மற்ற அத்தியாவசியப் பொருள்களை வழங்குவதற்காக ஒதுக்குகிறார்களே தவிர, மாநிலங்களுக்கு, பணமாக வழங்குவதற்கு ஒதுக்குவதில்லை.